# தூதன்

தூதன்-29 செப்டம்பர் - 2020 தூது-9




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 03 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 05 |
| உதவி ஆயரம்மா மடல் – இராஸ் அல் கைமா | 07 |
| செயலர் மடல் | 09 |
| ஏன் கலங்குகிறாய்? | 10 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 11 |
| அறிந்து கொள்வோம் | 12 |
| திருச்சபை ஜெபநாள் | 14 |
| லேயாள் | 16 |
| தெரிந்துகொள்வோம் | 18 |
| வேதவினா போட்டி | 20 |
| Health Tips | 22 |
| Children's Corner | 26 |
| Birthday Celebrants | 29 |
| Wedding Anniversary | 32 |
| Mount Moriah - Part 1 | 33 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான திருச்சபை மக்களே அனைவருக்கும் மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த மாதத்தில் முகநூலில் ஒரு படப்பதிவைப் பார்த்தேன். உணவு விநியோகம் செய்யும் ஓர் இளைஞன் மணற்புயலினால் சாலையில் பயணம் செய்ய இயலாமல் தவித்துக் கெண்டிருக்கும் போது அமீரகத்தைச் சார்ந்த அரபி சகோதரர் ஒருவர் தனது Jeep-ஐ அந்த இளைஞனுக்கு அருகாமையில் கொண்டு போய் நிறுத்தி மணற்புயல் ஓயும்வரை அவரை மறைவாய் பாதுகாத்து அதன் பின்னர் சென்ற மனிதாபிமானமிக்க செயலைப் பார்த்து கடவுளுக்கு நன்றி செலுத்தினேன்.

நம்முடைய வாழ்விலும் இது போன்ற எதிர்பாராத சூழல்களில் ஏற்படும் போராட்டங்கள், குழப்பங்கள், இழப்புகள், கண்ணீர்களின் பாதைகளில் நம்முடைய வாழ்வைப் பாதுகாக்கும் ஆறுதலைத் தரும் அடைக்கலமான இடங்களை நாம் தேடுகிறோம். திருமறையில் நாம் காணும் ஆற்றல் மிக்க கடவுள் நம் வாழ்வில் நம்முடைய மறைவிடமாய் இருக்கிறார் என்ற நம்பிக்கையின் செய்தியை நமக்குத் தருகிறது.

"நீர் எனக்கு மறைவிடமாய் இருக்கிறீர்." சங்கீதம் 32: 7

You are my hiding place. Psalm 32:7

இஸ்ரவேலின் பேரரசனாய் 40 ஆண்டுகள் ஆட்சி செய்த தாவீதின் வாழ்விலும் ஆற்றல் மிக்க கடவுள் தனக்கு மறைவிடமாய் இருந்த அனுபவத்தை 32-ம் சங்கீதம் 7-ம் திருவசனத்தில் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

1.ஆண்டவர் நமக்கு மறைவிடமாயிருக்கிறார்:

ஆற்றல் மிக்க கடவுள் மனித வாழ்வில் அனைத்து சூழமைவுகளிலும் உடனிருந்து வழி நடத்துகிறார் என்பது திருமறை வழங்கும் நம்பிக்கையின் செய்தி. ஆண்டவர் நமக்கு மறைவிடமாய் உள்ளார் என்பதை மனிதவாழ்வு சார்ந்த பல அடையாளங்கள் வழியாய் ஆண்டவர் வெளிப்படுத்துகிறார். தமது செட்டைகளின் மறைவில் தமது கூடார மறைவில் கன்மலையாய், கோட்டையாய், கேடகமாய் இப்படி பலவிதங்களில் நமக்கு மறைவிடமாய் இருந்து தீங்கு நம்மை அணுகாதவண்ணம் அரவணைத்து, கோழி தன் குஞ்சுகளைக் காப்பதுபோல், கழுகு தன் குஞ்சுகளைத் தன் செட்டைகளில் தூக்கிச் சுமப்பது போல் ஒவ்வொரு நாளும் பாதுகாத்து வருகிறார். இந்த covid-19 பெருந்தொற்று காலகட்டங்களில் நாம் உயிரோடு கூட வாழ்வதும், ஒவ்வொரு நாளும் பயணிப்பதும் அவர் நமக்கு மறைவிடமாய் உள்ளதால் மட்டுமே என்பதனை உணர்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

2. ஆண்டவர் நமது ஆலோசகர் - The Lord is our counsellor:

32- ம் சங்கீதத்தின் 8-ம் திருவசனத்தில் மறைவிடமாய் பாதுகாக்கும் ஆண்டவர் எவ்விதமாய் நல் ஆலோசனைகளைத் தருகிறார் என்று தாவீது அரசன் நமக்கு கற்றுத் தருகிறார். மறைவிடத்தில் பாதுகாக்கும் ஆண்டவர் அடுத்து நாம் எடுத்து வைக்க வேண்டிய அடிகளைக் குறித்தும், நாம் தொடர்ந்து பயணிக்க வேண்டிய பாதைகளைக் குறித்தும் நல் ஆலோசனைகளைத் தருகின்றார். இன்றைக்கு இந்த நவீன உலகில் கண்காணிப்பு கேமராக்கள் நம்மைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே இருப்பதை நாம் அறிவோம். பல வேளைகளில் இந்த கண்காணிப்புகளுக்கெல்லாம் மேலான ஒரு கண்காணிப்பைக் குறித்து இந்த சங்கீதத்தில் தாவீது குறிப்பிடுகிறார். நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன். இன்றைக்கு இந்தக் கண்காணிப்பும் ஆலோசனையும் நமக்கு மிக மிக அவசியம் என்பதனை உணர்ந்து ஆண்டவரின் வாக்குக்குக் கீழ்ப்படிவோம்.

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அமீரகத்தில் நம்முடைய ஆண்டவர் நம்மைக் கடந்த காலங்களில் வழிநடத்தின விதங்களை எண்ணிப்பார்த்து நன்றியுடன் அவரைப் புகழ்வது நம்முடைய கடமை என்று இந்நேரத்தில் நினைவு கூறுவோம்.

கடந்த எட்டு மாதங்களும் நம்மை ஏந்தி, சுமந்து, மறைவிடமாயிருந்து அனுதினமும் பாதுகாத்து ஏற்ற வேளையில் ஏற்ற ஆலோசனைகளைத் தந்து நம்மை வழிநடத்தின விதங்களை எண்ணி நாம் அவரைத் துதிப்போம்.

மேலும் நம்முடைய திருச்சபையின் குடும்பங்களில் இந்த covid-19 பாதிப்பினால் வேலை இழந்த குடும்பங்கள், சம்பளப் பற்றாக்குறைவினால் தவிக்கும் குடும்பங்கள், தங்களுக்கு அருமையானவர்களை இழந்து கண்ணீரில் வாடும் அனைத்து குடும்பங்களுக்காவும் கருத்தாய் ஆண்டவரிடம் நாம் ஜெபிப்போம்.

இந்தப் புதிய மாதத்திலும் ஆண்டவரின் அளவற்ற கிருபை நம்முடைய திருச்சபையையும், ஊழியங்களையும், அனைத்து குடும்பங்களையும் தாங்கி வழிநடத்தி ஆசீர்வதிப்பதாக.

ஆண்டவரின் திருப்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# உதவி போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! எந்தச் சூழ்நிலையிலும் நம்மோடிருந்து நம்மைப் பாதுகாத்து வழிநடத்தும் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய இரக்கமுள்ள கிருபையும், பராமரிப்பும் நம்மை ஆசீர்வதித்து வருகிறது. கர்த்தரை நன்றியோடு ஸ்தோத்தரிப்போம். கடந்த 5 மாதங்களாகத் தடைபட்டிருந்த ஆலய ஆராதனை கடந்த ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி வெள்ளிக்கிழமை முதல் ஃபுஜைரா திருச்சபையில் ஆரம்பிக்க தேவாதி தேவன் கிருபை பாராட்டினார். வெள்ளிக்கிழமைகளிலேயே கிடைத்த இந்த வாய்ப்பு மிகவும் பெரிதானது. கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கின்றேன். இன்னும் வருகின்ற நாட்களில் முழு வீச்சோடு கர்த்தரை ஆராதிக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நமது ஆராதனையைத் தொடருவோம்.

## நெருக்கடி நிலை

இப்போது நாம் அனுபவிக்கும் நெருக்கடி நிலையைப் போன்ற சூழ்நிலைகள் பரிசுத்த வேதாகமத்திலும் நிறைய இருந்திருக்கின்றன. அவற்றிலிருந்து மக்கள் எப்படி விடுபட்டனர் என்பது பற்றி தொடர்ந்து தியானிக்கலாம்.

### பலத்த சுழல் காற்று (மாற்கு 4:35-41)

அந்த நாளின் காலை முதல் ஆண்டவர் இயேசுகிறிஸ்து கலிலேயக் கடற்கரையில் ஒரு படகிலிருந்து மக்களுக்குப் போதிக்கின்றார். அன்று சாயங்காலத்திலே சீஷர்கள் ஆண்டவரோடு இணைந்து கடலின் அக்கரைக்குப்போக பிரயாணம் செய்கிறார்கள். பிரயாணத்தில் பலத்த சுழல்காற்று உண்டாகி அவர்களது பயணம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகிறது. அவர்களோடிருந்த ஆண்டவர் இயேசு அதனை அதட்டி அவர்களைப் பாதுகாக்கின்றார். அவர் நமது பெலவீனங்களை அறிந்தவர். அதற்காக அவரை ஸ்தோத்தரிப்போம். நம்பிக்கையற்ற சூழ்நிலைகளிலும் நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையின் பெயர் இயேசுகிறிஸ்து. ஆம் அவரே நம் நம்பிக்கை. இந்த சுழல் காற்றுச் சூழ்நிலை மூலமாக ஆண்டவர் நம்மோடு இடைபடுவார்.

### 1. சுழல் காற்றின் காட்சி - Reality of the Storm:

சீஷர்கள் படகில் சென்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட இந்த சுழல்காற்று எதிர்பாராத ஒன்று. நமது வாழ்க்கையிலும் எதிர்பாராத காற்றுகள், நெருக்கடிகள் வரலாம். இப்போது நாம் அனுபவிக்கின்ற இந்த கொரோனா சூழ்நிலையும் நாம் எதிர்பாராத ஒன்றுதான். திடீரெனத் தோன்றிவிட்டது.

திகைக்கின்றோம். அதுமாத்திரமல்ல, இந்த சுழல் காற்று இடைவிடாத, தொடர்ச்சியான ஒன்றாகவும் இருந்தது. இந்த கொரோனா நெருக்கடியும் தொடர்ந்து இருக்கிறது, என்று முடியும் என்று தோன்றவில்லை. ஆனாலும் அன்று இயேசு அந்த சுழல் காற்றை அதட்டி அமைதியை வரவழைத்தது போல இன்றும் நம் வாழ்வில் அமைதியை வரவழைப்பார்.

## 2. சுழல் காற்றின் காரணம் - Reason for the Storm:

நமது வாழ்வில் நாம் எதிர்நோக்கும் காற்றுகளில் சில நம்மை உருவாக்கும், சில நம்மைத் திருத்தும், சில நமக்கு அறிவு புகட்டும். அதுபோல இந்த சுழல் காற்றும் சீஷர்களுக்கு சில படிப்பினைகளைக் கற்றுக்கொடுத்தது. இயேசுவின் ஆறுதலளிக்கும் குணத்தையும், அவரது ஆற்றலையும் அறிந்துகொள்வதற்கு இந்த சுழல்காற்று காரணமாயிருந்தது. அதுபோல நம் வாழ்விலும் ஆண்டவரது ஆற்றலையும், ஆறுதலளிக்கும் குணத்தையும் கண்டுணர நாம் சந்தித்து வரும் இந்த நெருக்கடி நிலை போதுமானதாயிருக்கும். எல்லாவற்றையும் மேற்கொண்டு நாம் வரும்போது தேவனைச் சரியாய் அறிந்துகொள்ள முடியும். ஆகவே பயப்படாதிருப்போம். தேவன் நம்மோடிருக்கிறார். எவ்வித நெருக்கடிகளையும் நாம் மெற்கொள்ள முடியும்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு.ஜான் வெஸ்லி
உதவி ஆயர் - ∴.புஜைரா.

| திருமறைப் பாட ஒழுங்குகள் - செப்டம்பர் 2020 | | | | | |
|---|---|---|---|---|---|
| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
| 04-09-2020 | ஆசிரியர்கள் விடுதலையின் முகவர்கள் | நீதிமொழி. 8:1-12 | அப்போ. 8:26-38 | மாற்கு 6:34-44 | 119:97-104 |
| 11-09-2020 | பெண்கள் மாற்றத்தை உருவாக்குபவர்கள் | எண்ணாகமம் 27:1-11 | அப்போ. 18:24-28 | லூக்கா 1:46-55 | 119:57-64 |
| 18-09-2020 | அமைதியும் முரண்பாடுகளுக்-கான தீர்வும் | ஆதியா. 13:1-12 | அப்போ. 6:1-6 | மத்தேயு 20:1-16 | 16 |
| 25-09-2020 | ஒன்றிணைந்து சான்று பகருதல் | எசேக்கியேல் 37:15-22 | எபேசியர் 4:1-6 | யோவான் 17:20-26 | 133 |

# உதவி போதகர் மடல்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கு மாட்சிமையுண்டாவதாக.

இயேசுகிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் செப்டம்பர் மாதத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய மாதத்தின் ஒவ்வொரு நாளும் உங்கள் அனைவருக்கும் கர்த்தர் சுகம், பெலன் அருளி, பாதுகாத்து நடத்துவாராக.

கர்த்தருடைய வசனத்தைத் தியானிப்போம்.

திருமறைப்பாடம்: நியாயாதிபதி. 15:9-20 தியானவசனம்: நியாயாதிபதி. 15:19

"தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார்,
அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது. அவன் குடித்தபோது
அவன் உயிர் திரும்ப வந்தது. அவன் பிழைத்தான்,
ஆனபடியால் அதற்கு எந்நக்கோரி என்று பெயரிட்டான்."

அருளுரை தலைப்பு : கர்த்தர் புதுஜீவன் தருபவர்

இஸ்ரவேலரை பெலிஸ்தியரின் கைகளிலிருந்து விடுவிக்க
தெரிந்துகொள்ளப்பட்டவர் சிம்சோன் (நியாயாதிபதிகள் 13:5).

சிம்சோனிடம் கடவுளின் ஆவி இருந்தபடியினால் அவன் மகா ஆற்றல் பெற்றிருந்தான். இஸ்ரவேலரின் சத்துருவாக இருந்தவர்கள் பெலிஸ்தியர் ஆவார். திடமான படைபலம், போர் செய்வதற்கான ஆற்றல், தலைமைத்துவம் போன்றவை பெலிஸ்தியர்களின் கூடுதல் பெலமாகும். ஆனால் இஸ்ரவேலர்களிடையிலோ இவை குறைவாகக் காணப்பட்டது. இம்மக்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான தலைவர்களும் இல்லை. எனவே எதிரிகளை எதிர்கொள்வது என்பது மிகவும் கடினமாகவே காணப்பட்டது. இச்சூழலில்தான் சிம்சோன் கடவுளால் தெரிவு செய்யப்பட்டு இஸ்ராயேல் மக்களின் தலைவராகவும், பாதுகாவலராகவும் 20 ஆண்டுகள் செயல்பட்டார். சிம்சோனின் வாழ்விலும் ஆபத்துகள் காணப்பட்டன. அவ்வேளைகளில் கடவுளின் ஆற்றல் அவருக்குப் புத்துயிரை வழங்கியது.

கடவுள் எவ்விதத்தில் சிம்சோனுக்கு உதவியாக இருந்தார் என்பதனைத் தொடர்ந்து தியானிப்போம்.

1.நெருக்கங்களிலிருந்து விடுவிக்கும் கர்த்தர் (நியாயாதிபதிகள் 15:18,19): கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட சிம்சோன் பெலிஸ்தியப் பெண்ணைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். திருமணமான சில நாட்களிலேயே ஒரு பெரிய பகை உண்டாகி, தன் மனைவியை அவளுடைய வீட்டிலே விட்டுவிட்டுத் தன் தகப்பன் வீட்டிற்கு சிம்சோன் சென்றுவிட்டான். இனி அவன் திரும்பி வருவதில்லை என்று அவள் தகப்பன் வேறொருவனுக்கு மறுமணம் செய்து கொடுத்துவிட்டான்.

சிம்சோன் கோபமடைந்து 300 நரிகளைப் பிடித்து அவைகளின் வால்களில் தீமூட்டி, பெலிஸ்தியரின் முற்றிய பயிர்களிடையே அனுப்பினான். அவை தானியங்களையும், முற்றிய பயிர்களையும், திராட்சை, ஒலிவ தோட்டங்களையும் எரித்து அழித்தன. கழுதையின் பச்சைத்தாடை எலும்பை எடுத்து அதினாலே ஆயிரம் பெலிஸ்தியரைக் கொன்றுபோட்டான்.

இந்நிலையில் சிம்சோன் தாகமடைந்து களைத்துப் போனான். பெலனற்றுப்போன சிம்சோன் கடவுளை நோக்கி முறையிடத் தொடங்கினான். நியாயாதிபதிகள் 15:19-ல் கடவுள் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப் பண்ணினார். கடவுளின் ஆற்றல் வெளிப்பட்டதைக் காண்கின்றோம். தண்ணீரைக் குடித்தபோது அவன் பிழைத்தான். எனவே சிம்சோன் அவ்விடத்துக்கு “எந்நக்கோரி” என்று பெயரிட்டார். “கூப்பிடுகிறவனுடைய நீரூற்று” என்று பொருள் கொள்ளலாம். சிம்சோன் சந்தித்த நெருக்கத்திலிருந்து அவனை விடுவித்து புது வாழ்வு கொடுத்தார்.

2. புது பெலன் அருளும் கர்த்தர் (நியாயாதிபதிகள் 15:20): “சிம்சோன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்”

இருபது வருஷம் என்பது மிகப்பெரிய காலகட்டம். பெலிஸ்தரைக் கண்டு பயந்து, ஒதுங்கிப்போய் இருந்த இஸ்ரேயலர் இருபது வருஷம் தைரியமாய் வாழவும், தலைநிமிர்ந்து நிற்கவும் சிம்சோனைக் கடவுள் பயன்படுத்தினார்.

மரணத்தருவாயில் காணப்பட்டவர் கடவுளால் புதுபெலன் பெற்றுக்கொண்டார். இதனால் சிம்சோன் புது நம்பிக்கையையும், புதிய வேகத்தையும் பெற்றுக்கொண்டார். மரணத்தருவாயிலும் கடவுளால் புதுபெலன் தரமுடியும் என்கிற விசுவாசத்தைத் தந்தது.

யோசபாத் அரசர், தன்னை எதிரிகள் சூழ்ந்து வந்தபோது, கடவுளின் முகத்தை நோக்கிப் பார்த்தார். தனக்கு எதிரிகளை எதிர்த்து நிற்க பெலனில்லை என்றும் ஜெபிக்கிறார். கடவுள் அவருக்குப் புதுபெலன் அருளி எதிரிகளை மேற்கொள்வதற்கான ஆலோசனையைக் கொடுத்தார்.

எல்லாமே முடிந்ததென்று சோர்ந்து போயிருக்கிற வேளையில், நீ வெகுதூரம் ஓடவேண்டும் என்று சிம்சோனை 20 வருடம் பணிவிடையாற்ற ஆற்றல் படுத்திய கடவுள் நமக்கும் புதிய ஆற்றலைத் தருவார். வெற்றியை அருளும் கடவுளைப் பற்றிக்கொள்வோம்.

இயேசுகிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர் - RAK.

# உதவி ஆயரம்மா மடல்

கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பானவர்களே! இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து புதிய மாதத்தைக் காணச்செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.

## சர்தை சபை

### திருமறைப்பாடம்: வெளி. 3:1-6

சர்தை நகரம் : சர்தை நகரம் லீதியா பேரரசின் பழைய தலைநகரம். இது மிகப்பெரிய வியாபாரத்தலமாகவும், மிகவும் செழிப்புடனும் காணப்பட்டது. பேக்டோலஸ் (Pactolus) எனும் பொன் தரும் ஆறு இந்நகரின் வழியே சென்றது. இயற்கையாகவே சர்தை, வளம் பெற்ற நகராகத் திகழ இது காரணமாய் விளங்கியது. கம்பிளித் தொழிற்சாலையின் மிகச் சிறந்த மையமாக சர்தை திகழ்ந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் சிற்றின்ப வேட்கை கொண்டவர்களாகவும், பொழுதுபோக்கில் காலம் கடத்துபவர்களாகவும் திகழ்ந்தனர்.

சர்தை திருச்சபை : பிற திருச்சபைகளுக்கு ஏற்பட்டதைப் போன்ற கடுமையான துன்பங்கள் சர்தை திருச்சபைக்கு ஏற்படவில்லை. அரச வழிபாட்டாலோ, துன்புறுத்தல்களாலோ, யூதர்களின் தாக்குதல்களாலோ, திருச்சபையினுள் நிலவும் கோட்பாடு பிரச்சனைகளாலோ எந்த பாதிப்பும் இல்லை. சமாதானமாக இருந்தது. ஆனால் அந்த சமாதானம் கடவுளின் சமாதானம் அல்ல. போரினாலும், சாதனையினாலும் ஏற்பட்ட சமாதானம் மற்றும் வளமான வாழ்வினால் ஏற்பட்ட சமாதானம்.

சர்தை திருச்சபைக்கு கர்த்தரின் எச்சரிப்பு : நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய் (வெளி.3:1). சர்தை சபையினர் உலகப்பிரகாரமான காரியங்களில் அதிக நாட்டம் கொண்டவர்களாகவும், ஆன்மீக காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காதவர்களாகவும் காணப்பட்டனர். ஆகவே அவர்களை செத்தவர்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். மனிதர் பார்வையில் நற்பெயரும், புகழும் இருக்கிறது. ஆனால் உண்மையில் அந்த நற்பெயருக்குப் பாத்திரமாய் விளங்கவில்லை.

சர்தை சபையினரின் கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ளதாகக் காணப்படவில்லை (வெளி.3:2a)-ல் "நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து" என்று சர்தை சபைக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. நாங்கள் பாதுாப்புடன் இருக்கிறோம், பகைவர் பற்றிய அச்சம் நமக்கில்லை என மனவுறுதியில்

வாழ்ந்த சர்தை சபையினர் விழிப்புடன் இருக்கவேண்டும் என எச்சரிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மனிதரும் தனது பலவீனத்தைக் குறித்தும், தனது சிறப்பான நற்குணங்கள் குறித்தும் விழிப்புடன் இருப்பதும் மிகவும் அவசியமானது.

சர்தை சபையினர் கர்த்தரை உண்மையுடன் பின்பற்றவேண்டும் என்றும், பிற மக்களைத் தம்மிடம் வழிநடத்தும் நல்ல மாதிரிகளாக இருக்கவேண்டுமெனவும் உயிர்த்தெழுந்த கிறிஸ்து விரும்பினார். அந்த எதிர்பார்ப்பு சர்தை சபையினரிடம் காணப்படாததால், உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை (வெளி.3:2b) என்கிறார்.

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு கர்த்தரின் வாக்குத்தத்தம்: ஜெயங் கொள்ளுகிறவர்களுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். அன்றைய காலத்தில் வெண் வஸ்திரம் தூய்மை, கொண்டாட்டம், வெற்றி ஆகிய மூன்று காரியங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. மேலும் இதனைக் கருத்தில் கொள்வோருக்கும், பரலோக மகிழ்வில் பங்குகொள்வோருக்கும் கிறிஸ்துவில் வெற்றி பெறுவோருக்கும், இறுதி நாளில் வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும் என்கிறார்.

ஜீவ புஸ்தகத்திலிருந்து ஜெயங்கொள்கிறவர்களின் பெயர்கள் கிறுக்கிப்போடப்படுவதில்லை (வெளி.3:5). இவர்களின் பெயர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். ஜீவ புஸ்தகம் பற்றிய கருத்துக்கள் (யாத்.32:32, சங்.69:28, மல்கியா 3:16, தானியேல் 12:1, சங்கீதம் 139:16) ஆகிய பழைய ஏற்பாட்டின் பகுதிகளில் நாம் வாசித்து அறிந்துகொள்ள முடியும். ஜெயங்கெள்ளுகிறவர்களை, தம் பிதா முன்பாகவும் அவர்கள் நாமத்தைக் கிறிஸ்து அறிக்கையிடுவார் (வெளி.3:5).

சர்தை சபையின் நிலை மோசமாக இருப்பினும் அபாய கட்டத்தைத் தாண்டிவிடவில்லை. உயிர்த்த கிறிஸ்துவின் கூற்று எச்சரிப்பாக இருப்பினும் அதில் அழைப்பும், அறைகூவலும் அடங்கியிருக்கின்றன. நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கும் காலம் வரையிலும் நமக்கு பாடுகளும், வேதனைகளும் உபத்திரவங்களும் உண்டு. இவையெல்லாவற்றிலும் நாம் விசுவாசத்தோடு கர்த்தரைப் பற்றிக்கொண்டு சத்துருவை ஜெயிக்க வேண்டும். ஜெயங்கொள்கிறவர்களுக்கு மேன்மையான ஆசீர்வாதங்களை வாக்குப் பண்ணியிருக்கிறார். அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்துவோம். அதற்கான கிருபையை நமக்குக் கர்த்தர் அருளுவாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. J.விஜிலா ராணி
உதவி ஆயரம்மா - RAK.

# செயலர் மடல்

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நம்மை நல்மேய்ப்பராய் உடனிருந்து அதிசயமாய் வழிநடத்தி, பாதுகாத்து நடத்திவரும் நம் திரியேக தேவனுக்கு மகிமையையும், கனத்தையும் செலுத்துகிறேன்.

நம் திருச்சபையின் அனைத்து நிகழ்வுகளும் (Friday Service, Cell Prayers, Camp Ministries, Ladies Ministry) online மூலமாய் கர்த்தரின் மேலான கிருபையால் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த மாதத்திலும் நம் Chapliancy வழிகாட்டுதலின்படி நம்முடைய திருச்சபை ஜெப ஒழுங்குகள் பலவித பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் கடைபிடிக்கப்பட்டு கர்த்தரின் மேலான கிருபையால் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சபையாருக்கு மீண்டும் அன்பாய் நினைவுபடுத்த விரும்புகிறேன். நம் சபை போதகர் அறிவித்தவண்ணம், சபையார் யாரேனும் தற்போது உள்ள இக்கட்டான சூழலில் அவதிப்பட்டால், தயவுசெய்து நம் சபை போதகர் அவர்களை தயக்கமின்றி அணுக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம் Junior Church Retreat Final day program, Online மூலமாய் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்றது. இதில் பங்குபெற்ற அனைத்து பிள்ளைகளையும் கர்த்தரின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன். இதற்காக தங்கள் கடின உழைப்பை வழங்கிய JC Superindent, Teachers மற்றும் Volunteers-க்கு மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கடினமான கட்டுப்பாடான நேரத்திலும் என்னோடே கூட online ஒளிபரப்பை நடத்த உதவும் அனைவருக்கும் கர்த்தரின் நாமத்தினாலே நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Corona Virus-ஆல் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்காகவும், வேலை இழந்தோர், சம்பளம் இன்றி தவிப்போர் மற்றும் பல இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கித் தவிப்போரை சபையார் தங்கள் தனிப்பட்ட குடும்ப ஜெபங்களில் நினைவுகூற அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் நம்முடைய வாழ்விலும், திருச்சபை ஊழியங்களிலும் இயல்பான நிலைமை மாற, நம் தேவாதி தேவனை நோக்கி ஊக்கமாய் நம் வேண்டுதல், விண்ணப்பங்களைச் செலுத்துவோம். நம் தேவாதி தேவன் நம்மை எல்லாவித இக்கட்டுகளிலிருந்தும் விலக்கிக் காத்து, செவ்வையான பாதையிலே வழிநடத்துவார். ஜெபமே ஜெயம்.

Babu Jeyaseelan, Secretary.

# ஏன் கலங்குகிறாய்?

என்மனமே உன்தினமே ஏன்நின்று கலங்குகிறாய் ?
ஊள்மனமே சஞ்சலத்தில் ஊஞ்சலகத்தில் வதங்குகிறாய் !
அன்பிருக்கும் தேவன்முன் கண்ணுறங்காமல் காத்திருப்பாய்
என்னையும் ரட்சிக்கும் எங்தேவனிடம் காத்திருப்பேன்

குடிகளுக்கு ஆணையிடும் முடிமன்னன் தாவீது
அடிபட்ட இதயத்தைத் தடவிவிட்டான் தனித்திருந்து
விடிவுஇதோ பிடியென்று தடம்போட்டுக் கொடுத்துவிட்டு
முடித்துக்கிட்டான் கவலைகளின் பிடிகளுக்கு விடுதலைதந்து

உரைக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறுமட்டும் காத்திருங்கள்
ஒட்டிக்கிட்ட அப்போஸ்தலர்க்கு கட்டளையிட்டார் கர்த்தரின்நாள்
இறைமக்கள் எருசலேமில் நிறைந்திருந்து வேண்டினார்கள்
பெறுமட்டும் பொறுமைகாத்து நிறைவேற்றி நிமிர்ந்தார்கள்

கிலேசப் பட்டபெண்ணாள் ஆவேசப் பட்டமனதால்
கொதித்தெழும் வேண்டுதல்கள் குடிவெறியோ சந்தேகத்தில்
அலைஓய்ந்த நிலையிலே அன்னாள் சொல்லிவிட்டாள்
கர்த்தரின் சந்நிதியில் இதயத்தை ஊற்றிவிட்டேன்

அன்னாள் அந்நாள் காத்திருந்து ஜெபித்தாள்
அடைபட்ட குழந்தைப்பேறு தடைமீட்க வேண்டினாள்
உண்மையுள்ள வேண்டுதலுக்கு கண்டிப்பாய்பலன் நம்பினார்கள்
கண்முன்னே ஆதாரம் வேதத்தைத் திறவுங்கள்

தேவனே ஆவலாய் விசாரிக்கிற படியாலே
வைத்துவிடுங்கள் உங்கள் கவலைகளை அவர்மேலே
போதிச்சாரு பேதுரு அப்போஸ்தலர் சபையிலே
பெற்றுவிட்ட அனுபவத்தால் பட்டுணர்ந்த சாட்சிகளிலே

துதிக்கத் துதிக்க ஒதுங்கிஒளியும் கலங்கும்கலக்கம்
தொடர்ந்தால் கலக்கமாகச் சோர்வில் இறக்கும்
அதிகச் சோர்வோ உடலை உருக்கும்
உருகித் துதித்தால் நோய்நொடிகளைத் துறத்திடும்.

ஆதாரம் : சங்கீதம் 43:5; அப்போ.1:5,14; 1 சாமு.1:10,15; 1பேதுரு 5:7
கவிதை எண் : 232
கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும்
பெருமையானவைகளைப் பேசும், பாருங்கள், சிறிய நெருப்பு
எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! யாக்கோபு 3:5

மனிதரின்...
மனம் மகிழுதே!
மலைகளை
நதிகளை
இயற்கையின்
அதிசயமான
அழகினை
ரசிக்கையிலே
தேவனின்...
படைப்பின்
இரகசியத்தைக்
கூட்டுகிறதே...
மனிதரின்...
உள்ளங்களை
உணர்வுடன்
பார்க்கையிலே,
இயேசுவையே
காட்டுதே...
கண்களை மூடி
கசிந்துருகி
துதிக்கையிலே...
பக்தி பரவசம்
இன்னிசையை
மீட்டுதே...
இன்னும்
கர்த்தரின்
அற்புதத்தை
பாருங்களேன்...
மனிதரின்
இதயத்தை
இருபக்கமுமே
கைகளை
இணைத்ததின்
காரணமோ...

கைகளால்
வாங்கினால்
மட்டும் போதுமா...
அள்ளிக்
கொடுக்கவும்
வேண்டாமா...
வாய்க்குள்
பற்களின்
பாதுகாப்பிலே
நாவை
எப்போதும்
ஈரப்பதம்
நிறைந்ததாகவே
வைத்தது ஏன்...?
ஏ... மனிதா...
இனிமையாகப் பேசு
இரக்கமுடன் பேசு
ஈரமாகப் பேசு
ஈகை குணமுடன் பேசு
இதுதானே...
கர்த்தரின் நோக்கம்
நல்ல வார்த்தை
நாலு பேசினால்
நாவுக்கும் மேன்மை
கேட்போருக்கும்
நன்மை அல்லாது
சதா காலமும்
இதோ பார்...
நான்... என்ற
பெருமை பேசவா...
கோபக் கனவில்
பேசும்
கடுஞ்சொல்லும்... ஒரு
சுடுஞ்சொல் தானே...

மகனே...
நாவடக்கம்
நலம் தரும்தானே
நெருப்புக்கு...
விருப்பு எது
வெறுப்பு எது.. ஒரு
தீப்பொறியோ...
பெரிய காடானாலும்
எரித்து விடும்தானே...
உலகில் பல
நாட்டிலும்
எரிமலைகள்
எரிந்துகொண்டிருப்பதை
அறிவோம்தானே...
மூன்று உலகிலும்
முக்கிய
திவ்விய நாமமாக
இருப்பதும்
மனிதரின்...
தவத்தில்
ஜெபத்தில்
உள்ளத்தில்
துன்பத்தில்
துயரத்தில்
சொல்லும்
நாமம்
உலகினை
ரட்சித்த
ஒரே நாமம்
இயேசுவின்
திருநாமமே
மனமே
ஜெபித்திரு
தினமே.. அனுதினமே!

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# அறிந்து கொள்வோம்!

## YEAR OF THE JUBILEE







நமது திருச்சபையின் 40-வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை நினைவு கூருகின்ற நாம் திருமறையில் கூறப்பட்ட பல்வேறு கொண்டாட்டங்களைத் தியானித்து வருகின்றோம். அவ்வரிசையில் இன்று நாம் தெரிந்துகொள்ளப் போகின்ற கொண்டாட்டம் யூபிலி.

யூபிலி - (Jubliee) என்ற வார்த்தை Jublation என்ற ஆங்கில வார்த்தையை ஒத்ததாக இருந்தாலும், அது மிகுந்த மகிழ்ச்சி மற்றும் வெற்றியின் உணர்வு என்று அர்த்தமல்ல. அதற்குப் பதிலாக, மெசியானிக் வேதாகமத்தின்படி இந்த சொல் "யோவெல்" என்ற எபிரெய வார்த்தையிலிருந்த வந்தது. அதாவது ஆட்டுக்கடாவின் கொம்பிலிருந்து செய்யப்படும் ஷோபார் என்ற இசைக் கருவியிலிருந்து வந்தது. ஷோபார் என்றால் ஆட்டுக்கடாவின் கொம்பு. இக்கருவியை இசைத்துதான் யூபிலி வருடத்தைத் தொடங்குவார்கள். ஏனெனில் இது தங்கள் சுதந்தரத்தைப் பெற விடுக்கும் அழைப்பு.



நம்முடைய வேதாகமத்தில் யூபிலி என்பது என்ன? அதை எப்போது கொண்டாட வேண்டும் என்று நம் தேவனாகிய கர்த்தர் மிகத் தெளிவாக எண்ணாகமம் 25ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். கானான் தேசத்தைப் போய் சேர்ந்திருக்கும் போது, தேசம் கர்த்தருக்கென்று ஓய்வு கொண்டாட வேண்டும் என்கிறார். ஆகவே ஆறு வருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்சத் தோட்டத்தைக் கிளை கழித்து, அதின் பலனைச் சேர்ப்பாயாக. ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும். அதில் உன் வயலை விதைக்காமலும், உன் திராட்சத் தோட்டத்தைக் கிளை கழிக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளை கழிக்காதே விட்ட திராட்சச் செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக. தேசத்துக்கு அது ஓய்வு வருஷமாயிருக்கக்கடவது. தேசத்தின் ஓய்விலே பயிராகிறது உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக. உன் வேலைக்காரனுக்கும், உன் வேலைக்காரிக்கும், உன் கூலிக்காரனுக்கும், உன்னிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும், உன் நாட்டு மிருகத்துக்கும், உன் தேசத்தில் இருக்கிற காட்டு மிருகத்துக்கும் அதில் விளைந்திருப்பதெல்லாம் ஆகாரமாயிருப்பதாக. அன்றியும் ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழு வருஷங்களை எண்ணுவாயாக. அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் நாற்பத்தொன்பது வருஷமாகும். ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கும் விடுதலை கூறக்கடவீர்கள். அது உங்களுக்கு யூபிலி வருஷம்.

அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன்தன் குடும்பத்துக்கும் திரும்பிப் போகக்கடவன். அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக. அதிலே விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளை கழிக்காமலும் விடப்பட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பீர்களாக. அது யூபிலி வருஷம். அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அந்த வருஷத்தில் வயல்வெளியில் விளைந்தவைகளை நீங்கள் புசிக்கவேண்டும்.

யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப் போகக் கடவன். ஆகையால், பிறனுக்கு எதையாவது விற்றாலும், அவனிடத்தில் எதையாவது கொண்டாலும், ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யக்கூடாது. யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்ப பிறனிடத்தில் கொள்ளுவாயாக. பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்ப அவன் உனக்கு விற்பானாக. யூபிலி வருடத்தில் காணியாட்சியை விற்பது எப்படி? வீட்டை விற்பது எப்படி? அவற்றை மீட்டெடுப்பது எப்படி என்று மிகத் தெளிவாக லேவி. 25ம் அதிகாரத்தில் விளக்குகின்றார். அதுமட்டுமல்லாமல் தரித்திரப்பட்டுப்போன சகோதரன் விலைப்பட்டுப்போனால் அவனை எப்படி நடத்துவது, அடிமைகளை விலைக்கு வாங்குவது போன்று பல காரியங்களையும் கூறியுள்ளார். யூபிலி வருடத்தில் அடிமையானவன் தன் பிள்ளைகளோடுங்கூட விடுதலையாவார்கள். யூபிலி வருஷமுதல் தன் வயலை பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், அது அவன் மதிப்பின்படி இருக்கவேண்டும். அது யூபிலி வருஷமட்டுமுள்ள மற்ற வருஷங்களின்படியே ஆசாரியன் திரவியத்தைக் கணக்குப் பார்த்து அதற்குத் தக்கதாக உன் மதிப்பிலே தள்ளப்படவேண்டும். (27:17,18)

யூபிலி வருஷத்தில் மீட்கப்படும்போது, சாபத்தீடான வயலாகக் கர்த்தருக்குக்கென்று நியமிக்கப்பட்டதாயிருக்கக்கடவது. அது ஆசாரியனுக்கு காணியாட்சியாகும் (லேவி. 27:21). அது யூபிலி வருஷமட்டும், உன் மதிப்பின்படி பெறும் விலை இன்னதென்று ஆசாரியன் அவனோடே கணக்குப்பார்த்து, அந்த உன் மதிப்பை, கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்படி, அவன் அந்நாளிலே கொடுக்கக்கடவன் (லேவி. 27:23). யார் கையிலே வயலைக் கொண்டானோ, அந்த காணியாட்சிக்காரன் வசமாய் அது யூபிலி வருஷத்தில் திரும்பச் சேரும். இஸ்ரவேல் புத்திரருக்கு யூபிலி வருஷம் வந்தாலும் அவர்களுடைய சுதந்தரம் அவர்கள் உட்பட்டுப்போன கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்து போகும். (எண். 36:4)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, யூபிலி கொண்டாட்டத்தின் போது மகிழ்ச்சி மற்றும் வெற்றியின் உணர்வு நம்மையும் அறியாமல் நம்மை ஆட்கொள்ளும். ஆனால் ஒரு யூபிலி ஆண்டில், பரிசுத்த ஆவியின் மூலம் நம் இருதயங்களை நாம் ஆராய்ந்து பார்த்து, நாம் மனந்திரும்ப வேண்டிய பகுதிகளை, தனிப்பட்ட முறையிலோ, அல்லது ஒரு குடும்பமாகவோ, அல்லது ஒரு சமூகமாகவோ வெளிக்கொணர்ந்து, கர்த்தருடைய வழிகளில் நாம் திரும்பவும் அழைக்கப் படுகின்றோம். நம்மிடையே மன்னிப்பு கோருபவருக்கு மன்னிப்பை அளித்து, நம்மை நாம் தாழ்த்தி, நம்மை வெறுமையாக்கி, பரிசுத்தாவியரின் துணைக்கொண்டு வாழும்போது யூபிலியின் மகிழ்ச்சியை நாம் உளமாற அனுபவிக்க முடியும். தேவன் தாமே நமக்கு அவ்வாசீர்வாதத்தைத் தந்தருளுவாராக. ஆமென்.

தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

# திருச்சபை ஜெபநாள் 06-09-2020 (முதல் ஞாயிறு)

"சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது". சங்கீதம் 89:8

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- கர்த்தருடைய கிருபையால் காணொளி காட்சி மூலம் JC Retreat Final Day Program சிறப்பாக நடைபெறவும், நமது திருச்சபை ஆராதனைகள் யாவும் வெகுசிறப்பாக நடைபெறவும் கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக நன்றி கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- கொரோனா பாதிப்புகளிலிருந்து கர்த்தர்தாமே யாவரையும் பூரணமாய் விடுவித்து பாதுகாத்து நடத்திட தொடர்ந்து ஜெபிப்போம்.

“எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக
என் கண்களை ஏறெடுக்கிறேன்.” சங்கீதம் 121:1

**நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

# லேயாள்

மறைந்திருக்கும் முத்துக்கள் பல நம் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன. நற்சுபாவங்களும், தியாகமும், தேவபிரியர்களுமாய் வாழ்ந்து சாதித்தவர்களே முத்துக்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர். அத்தகைய சிறப்புமிக்க இடத்தைச் சொந்தமாக்கிக் கொண்டவள்தான் தியாக சிற்பி லேயாள். அழகில்லாதவளாய், கூச்சப்பார்வை உள்ளவளாயிருந்தபடியால் யாக்கோபு லேயாளை நேசிக்கவில்லை. ஆனாலும் இவளது நற்குணங்கள் பாராட்டப்படத்தக்கவை. "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்"(நீதி. 31:30).

1. லேயாளின் திருமண வாழ்வு: ராகேல் மேல் பிரியப்பட்டு அவளை மணம் செய்ய யாக்கோபு விரும்பினான். தான் அழகற்றவள், எனக்கு முன் தங்கைக்கு திருமணம் நடக்கிறதே என வருந்தியிருப்பாள் லேயாள். யாக்கோபு ராகேல் திருமணத்தன்று, லேயாள் மனது எவ்வளவு துன்பப்பட்டிருக்கும். அதுமட்டுமல்ல, தன்னை விரும்பாத யாக்கோபிற்கு தன் தகப்பனால் ஏமாற்றி திருட்டளவாய் மனைவியாகக் கொடுக்கப்பட்டாள். லேயாளின் திருமணம் ஏமாற்று வியாபாரம் போலாயிற்று. அது துக்கத்திற்கு மேல் துக்கமாக தன் தகப்பனால் கட்டாயப்படுத்தப்பட்டு விற்கப்பட்டது போன்ற சூழ்நிலையாயிற்று. சராசரி பெண்ணுக்குள்ள அடிப்படைச் சுதந்தரம் கூட அவளுக்குக் கிடைக்கவில்லை. லேயாளுக்கு அவள் கணவன் ஆதரவாயிருக்கவில்லை. ஏழு நாட்களுக்குப் பிறகு ராகேலையும் யாக்கோபு திருமணம் செய்தான். பாரபட்சத்துடன் லேயாளை விட ராகேலை அதிகம் நேசித்தான். வாழ்வின் துவக்க காலமே லேயாளை வேதனைப்படுத்தியது.

2. லேயாளின் விசுவாச வாழ்க்கை: தன் கணவரின் அன்பு கிடைக்காமல் ஏமாற்றப்பட்ட லேயாள் கர்த்தர் மேல் ஆழமான நம்பிக்கையுடன் வாழ்வைத் தொடர்ந்தாள். "லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்"(ஆதி. 29:31). தன்னை உயர்த்திய தேவனை லேயாள் கொண்டாடினாள். சிறுமைப்பட்ட காலத்தில் பெற்றெடுத்த தன் பிள்ளைகளுக்கு பெயரிட்ட விதத்திலிருந்தே எந்தச் சூழ்நிலையிலும் அவள் தேவனையே சார்ந்திருந்ததைப் பார்க்கிறோம். ரூபன் - கர்த்தர் பார்த்தருளினார் (ஆதி 29:32) என்றும், சிமியோன் - கர்த்தர் கேட்டருளினார் (ஆதி 29:33) என்றும், யூதா - கர்த்தரைத் துதிப்பேன் (ஆதி 29:35) என்றும் பெயரிட்டு தேவாதி தேவனைத் துதித்தாள். துதித்தவள் சந்ததியில் தான் துதிகளில் வாசம் செய்யும் மேசியா பிறந்தார். நாமும் கூட வாழ்க்கையின் இறுக்கங்கள் நம்மை மடிவாக்கி, மடிய இடம் கொடுக்காமல் தேவனைத் துதிக்கப் பழகினால் அவர் நம்மை உயர்த்துவார்.

3. நற்குணசாலி: லேயாளின் உள் அழகு மெச்சப்படத் தக்கது. தன் கணவன் தன் மீது அன்பு கூறாவிட்டாலும் இவள் யாக்கோபை அதிகமாக நேசித்தாள். தன் தங்கை, தன் மீது பொறாமைப்பட்டாலும் இவளோ ராகேலை வெறுக்கவில்லை. தன் மகன் ரூபன் கொண்டு வந்த தூதாயீம் கனிகளை ராகேல் கேட்டபோது அதைக் கொடுத்தாள். தன்னுடைய விருப்பு

வெறுப்புகளைக் கூட விட்டுக் கொடுத்து, தன் குடும்பத்தைக் கட்டி எழுப்ப முயற்சித்தாள். எத்தனையோ பிரச்சனைகளை எழும்ப விடாமல் அரவணைத்து, விட்டுக் கொடுத்துச் சமாளித்தாள் லேயாள். அற்பக் காரியங்களில் கூடத் தேவன் விரும்புவதும் எதிர்பார்ப்பதும் நம் இருதயத்திலிருந்து பிறக்கும் கல்வாரி அன்பே.

4.தேவ சித்தத்தை நிறைவேற்றினாள்: தேவன் யாக்கோபிடம் உன் சுயதேசம் திரும்பு என கட்டளையிட்டதைக் கேட்ட லேயாள், அவ்வளவு தூரம் தான் தாழ்த்தப்பட்டிருந்தாலும் தேவசித்தத்தை நிறைவேற்ற தன் கணவருக்கு தோள் கொடுக்க முன் வந்தாள். யாக்கோபோடு சுய தேசம் வர தீர்மானித்தாள். அன்று தன் பிரயாணத்தைத் தொடங்கிய யாக்கோபு வழியில் தேவனைச் சந்தித்து புதிய மனிதனாக புதிய ஆசீர்வாதங்களுடன் வாழ்ந்தான். நாமும் தேவசித்தத்தை நிறைவேற்ற நமது குடும்பங்களில் நமது பங்கை நிறைவேற்றுகிறோமா? நம்மை யாரும் புரிந்துகொள்ளாமலிருக்கலாம். விட்டுக் கொடுத்தால் குடும்பம் வாழும். தேவசித்தத்திற்குக் குறுக்கே நிற்காமல் ஆசீர்வாதத்தையே தெரிந்து கொள்வோம்.

5.லேயாளின் பொறுமையின் பரிசு: லேயாள் மரித்த போது தன் பிதாக்களுடைய கல்லறையில் சேர்க்கப்பட்டாள். வாழ்க்கையின் துவக்க நாட்களில் தன்னிடம் அன்பு கூறாத கணவராகிய யாக்கோபு தான் மரணமடையும் நேரம் வரும்போது தன்னை லேயாளை அடக்கம் பண்ணின தன் பிதாக்களண்டையில் அடக்கம் பண்ணக் கூறினான். (ஆதி 49:31). இஸ்ரவேலரின் திருமண வாழ்த்துதல் வழக்கச்சொல்லில் லேயாளின் பெயர் இடம் பெற்றது. (ரூத் 4:11). லேயாளின் சந்ததியில் தான் நம் இரட்சகராம் இயேசுவுக்கு ஊழியம் செய்த லேவி கோத்திரம் உருவாகியது. லேவி கோத்திரத்தார் மட்டுமே ஆலயப்பணிவிடை செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் லேயாளின் சந்ததியில்தான் மேசியா பிறந்த யூதா கோத்திரம் வந்தது. சஞ்சலம், ஏமாற்றம், மனப் போராட்டத்தின் மத்தியில் லேயாள் பெற்றெடுத்த யூதா கோத்திரத்தில் தான் மனுக்குலத்தை மீட்க வந்த யூதா கோத்திரத்துச் சிங்கமாம் கிறிஸ்து பிறந்தார்.(ஆதி 49:8-10)

லேயாளைப் போல நாமும் குடும்பத்தில் அற்பமாக எண்ணப்படுகிறோமா? கலங்க வேண்டாம். மனிதர்களைப் பார்க்காமல் தேவனையே நோக்கிப் பார்த்து தைரியமடைய கற்றுக் கொள்வோம். தேவன் நம்மூலமாக பெரிய காரியங்களைச் செய்யப் போகிறதினால் அவரைப் பாடித் துதிப்போம். உலகத்தை அசைக்கும் இஸ்ரவேலைக் கட்டின லேயாளைப் போல நாமும் தேவனிடம் நம்மை அர்ப்பணித்து, அவர் மேல் நம்பிக்கையாயிருக்கும் போது அவரே காரியத்தை வாய்க்கச் செய்து, ஏற்ற காலத்தில் உயர்த்தி மேன்மைப்படுத்துவார். நமது அங்கலாய்ப்புகளில் கூட இருக்கும் தேவனையே சார்ந்திருந்தால் பரலோகத்தில் மிகுந்த பலன் உண்டு. நம் வாழ்வாலும், சாட்சியாலும், ஜெபத்தாலும் கிறிஸ்துவை மூலைக்கல்லாக வைத்து நம் குடும்பங்களை, சமுதாயங்களைக் கட்டி எழுப்ப கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

இனிதா மோசஸ்

# தெரிந்து கொள்வோம்

மிஷனெரிகள் பகுதி 85

**அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் - மத்தேயு 9:37**

கனம் ஐ.ஜே.ஐயாத்துரை

கனம் ஐ.ஜே.ஐயாத்துரை அவர்கள் 1890-ம் ஆண்டு மே மாதம் 19-ம் நாள் திருநெல்வேலி மாவட்டம் இடையன்குளம் என்னும் இடத்தில் பிறந்தார். இவரது முழுப்பெயர் ஐசக் இயேசுவடியான் ஐயாத்துரை.

ஆரம்ப நாட்களில் ஆசிரியராகத் தனது பணியைத் துவங்கியவர், பின்னர் கிறிஸ்துவின் அன்பால் இணைக்கப்பட்டு நற்செய்திப்பணியில் ஆர்வம் கொண்டு தன்னுடைய ஆசிரியர் பணியை விட்டு சுவிசேஷம் அறிவிக்க பேராயர் V.S. அசிரியாவோடு சேர்ந்து 1912-ம் ஆண்டு ஜட்சர்லா என்ற இடத்திற்கு மிஷனெரியாகச் சென்றார்.

ஊழிய வாஞ்சையினால், கிராமங்கள் தோறும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தார். தங்குவதற்கு வீடு கிடைக்காத நிலையில் மாட்டு வண்டியின் அடியில் படுத்து உறங்குவார். பலவிதமான பாடுகள் மத்தியிலும், தளராது நற்செய்தியை அறிவித்து வந்தார். இரட்சண்ய யாத்திரிகம் என்ற ஒற்றைத்தாள் பிரதியை அச்சிட்டு தான் செல்லும் இடங்களில் கொடுத்து ஊழியத்தைத் திறம்பட செய்து வந்தார்.

